தொழில்சார் கல்வி

# ஆளுமை - 2



ஆசிரியர் கல்விப் பாடநெறி

120108 — 2

| | | |
|---|---|---|
| எழுத்தாளர் | — | பீ. எம். எஸ். மஹலேகம் |
| பதிப்பாசிரியர்கள் | — | எச். ஜீ. சி.ரீ. ஜயசேகர |
| | — | எஸ். டீ. லயனல் அமரகுணசேகர |
| | — | பீ. டீ. டேவிட் |
| | — | பீ. எம். எல். ஆர் பண்டார |
| மொழிபெயர்ப்பாளகள் | — | எம். டீ. ஜே. குணத்திலகா |
| | — | சீ. புலேந்திரன் |
| | — | வை. எல். ஏ. வஹாப் |
| | — | கே. ரீ. கனகரத்தினம் |
| | — | வீ. இராசையா |
| தளக்கோலம் | — | ஜீ. எச். மகிந்தரத்ன |
| | — | ஏ. சிவராஜா |
| படங்கள் | — | பீ. பிலப்பிற்றிய |
| மேற்பார்வை | — | கே. ஏ. பியதிஸ்ஸ |
| | — | ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | — | எஸ்: டீ. லயனல் அமரகுணசேகர. |

# ஆளுமை

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| தொழில்சார் கல்வி | :1201 |
| ஆளுமை 2 | :120108-2 |

உள்ளடக்கம் பக்கங்கள்


0.0. அறிமுகம் .................... 3

பகுதி - 1

1.0. ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குப் பெறும் காரணிகள் .................... 3

பகுதி - 11

2.0. ஆசிரியரும் ஆளுமை வளர்ச்சியும் .................... 12

பகுதி - 111

3.0. ஆளுமையை அளவிடுதல் .................... 20

4.0. பிற்சோதனை .................... 33

5.0. ஒப்படை .................... 35

6.0. விடைகள் .................... 36

7.0. உசாத்துணை நூல்கள் .................... 36



© 1990—தேசியக் கல்வி நிறுவகம்



பதிப்பு 1:2

# 0.0. அறிமுகம்

நீங்கள் இதற்கு முன் கற்ற இல. 8 ஆளுமை - 1 மொடியூலில்

- ★ ஆளுமை என்ருல் என்ன?
- ★ அது எவ்வாறு உருவாக்கம் பெறுகிறது.
- ★ முதிர்ச்சியடைந்த ஆளுமையில் இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

என்ற விஞக்களுக்கு பொருத்தமானவிடயங்களைக் கற்றுள்ளமை உங்களுக்கு ஞாபகமிருக்கும். ஆளுமை - 2 பற்றிய இம் மொடியூலில்,

- ★ ஆளுமை உருவாக்கத்தில், செல்வாக்குப் பெறும் காரணிகள்
- ★ ஆசிரியரும், ஆளுமை வளர்ச்சியும்
- ★ ஆளுமை அளவிடுதல்.

என்ற தலைப்புக்களின் கீழ் மேலதிகமாகக் கற்றுக்கொள்ள உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. ஆளுமையின் முதிர்வு நிலையில் சூழல் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்துகிறது. ஆளுமை என்பது பரம்பரையும் சூழலும் மோதலால் உருவாகும் விளைவேயாகும் எனவும் கூறப்படுகிறது. ஆதலால் இம் மொடியூலில் ஆளுமையில் சூழற் காரணிகளின் செல்வாக்கு என்பது பற்றி ஆராய்வோம்.

பகுதி 1

# 1.0. ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குப் பெறும் காரணிகள்.

இச்செயலை நாங்கள் ஒரு செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் ஆரம்பிப்போம்.

செயற்பாடு 1

இச்செயற்பாட்டினுல், பிள்ளைகளின் நடத்தைகளை அவதானித்து, தெரிவு செய்துள்ள விசேட நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ள சூழற் காரணிகளைக் கண்டறிவதும் செயற்பாட்டில் ஈடுபடுவதும், தகவல்களை அளிப்பதும் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. நீங்கள் கற்பிக்கும் வகுப்பிலுள்ள, நீங்கள் விரும்பிய பிள்ளைகள் பத்துப் பேரைத் தெரிவு செய்து, இலக்கங்களுடன் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

2. இதற்கடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ள பதிவேட்டில் 'அ' கூட்டில் குணப்பண்புகள் குறிக்கப்பட்டுள்ளன.

3. பதிவேட்டில் உள்ள குணப்பண்புகள் பெயர்ப் பட்டியலிலுள்ள ஒவ்வொரு பிள்ளையிடமும் காணப்படுகின்றனவா? என்பதை, பிள்ளைகள் அறியாது ஒரு வார காலம் வகுப்பறையில் அவதானியுங்கள்.

4. ஒவ்வொரு பண்புகளின் எதிரிலும் அப் பண்புகளைக் காட்டும் பிள்ளைகளின் இலக்கங்களை எழுதுங்கள். உதாரணமாக வெட்க சுபாவமுடையவர் - 8

(அவன் உங்களது பெயர்ப்பட்டியலில் 8ம் இலக்க மாணவன்)

இவ்வாறு குறிப்பிட்டு வரும்போது ஒவ்வொரு குணப்பண்புகளின் எதிரிலும் பிள்ளைகள் சிலர் இருப்பார்கள் என்பதைக் கவனியுங்கள். அதே போன்று ஒரு பிள்ளையின் இலக்கம் குணப்பண்புகள் பலவற்றின் எதிரில் இடம் பெறவும் இடம் இருக்கிறது. மேலும் ஒரு பிள்ளையின் குறிப்பிட்ட நடத்தையை அடிக்கடி காணக்கூடியதாக இருந்தால் அந் நடத்தையைக் காணும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவனின் இலக்கத்தைப் பொருத்தமான குணப்பண்புக் கூட்டிற் குறித்துக் கொள்ளுங்கள்.

| | குணப்பண்புகள் | இலக்கங்கள் மாணவர்களின் |
|---|---|---|
| 1 | வெட்கமுடையவர் | |
| 2 | அடிக்கடி பணிவைக் காட்டுபவர் | |
| 3 | குழப்பம் விளைவிப்பவர் | |
| 4 | எப்போதும் கோபம் கொள்பவர் | |
| 5 | மற்றவர்களைப் பணியவைக்க விரும்புவர் | |
| 6 | அழிவு ஏற்படுத்துபவர் | |
| 7 | தனித்திருக்க விரும்புவர் | |
| 8 | சோம்பலானவர் | |
| 9 | இலகுவில் உளச்சோர்வு அடைபவர் | |
| 10 | ஒத்துழைக்கும் விருப்புள்ளவர் | |
| 11 | எப்போதும் மற்றவர்கட்கு உதவுபவர் | |
| 12 | நன்நடத்தை உள்ளவர் | |
| 13 | பொறுப்புக்களை ஏற்க விரும்புவர் | |
| 14 | தலைமைத்துவத்தை விரும்புவர் | |
| 15 | எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பவர் | |
| 16 | விளையாட்டாகப் பேசி மகிழ விருப்புள்ளவர். | |
| 17 | கல்விச்செயற்பாடுகளில் விருப்புள்ளவர் | |
| 18 | தனித்திருப்பவர் | |
| 19 | நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் | |
| 20 | பொறுப்புக்களை ஏற்க விருப்பமற்றவர் | |
| 21 | உற்சாகமுள்ளவர் | |
| 22 | பொது உடைமைகளைப் பாதுகாப்பவர். | |

**மதிப்பீட்டின் பகுப்பு:**

மேற்குறிப்பிட்ட பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள துலங்கல்களை சுருக்கிக் கூற முயலுவோம். கீழ்வரும் அட்டவணையை இப்பெறுபேற்றின் உதவியுடன் உங்களால் தயாரிக்க முடியும். ஒவ்வொரு பிள்ளையும் வெவ்வேருக காட்டியுள்ள குணப்பண்புகள் அட்டவணை; (பதிவேட்டில் ஒரே மாணவனின் இலக்கம் பல குணப்பண்புகளின் எதிரில் இடம்பெற்றிருக்கும் சந்தர்ப்பங்கள்) தெளிவாகக் காணக்கூடியதாயுள்ள குணப்பண்புகள்; (ஒரு மாணவனின் ஒரே குணப்பண்பின் எதிரில் ஒரு இலக்கம் பலமுறை குறிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள்) என்ற இப்புள்ளி விபரங்களின் அடிப்படையில் உங்களால் ஒவ்வொரு பிள்ளையையும் வெவ்வேருக்கிக் காட்டும் குணப்பண்புகள் யாவை எனக் கூறமுடியும். தெளிவாகக் காணப்படும் குணப்பண்புகள் எவை என்பதைக் காட்டமுடியும்; பெரும் பாலானேரிடம் காணப்படும் குணப்பண்புகள் யாவை. என்பதையும் தீர்மானிக்க முடியும்.

**செயற்பாடு: இரண்டாம் கட்டம்**

இச்செயற்பாட்டின் ஆரம்பக் கட்டத்தின் பெறு பேறுகளினுல் விசேட குணப்பண்புகளைக் காட்டிய பிள்ளைகள் இருவரைத் தெரிவு செய்து அவர்களின் குணப்பண்புகளின் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ள சூழற்காரணிகள் எவை என நாங்கள் ஆராய்வோம். இதற்காக நீங்கள் தேவையான குழந்தைக்கல்விக்கான தொழில் நுட்பமுறைகளைப் பாவித்துக் கொள்ளலாம். (மொடியூல் இலக்கம் 120103) உங்களது பெறுபேறுகள் பின்வரும் முறையில் சுருக்கமாக அமைய வேண்டும்.


1. குணப்பண்புகளின் ஒழுங்கமைப்பின் மீது, சூழல் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. தாக்கம் ஏற்படுத்தவில்லை.

2. குணப் பண்புகளும் அதன் இயல்பும் தாக்கம் ஏற்படுத்திய சூழற்காரணிகள்.

| | |
|---|---|
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |
| -------------------- | -------------------- |

**குணப்பண்புகளின் மீது தாக்கம் ஏற்படுத்தும் காரணிகள்**

தனிப்பட்ட ஒருவரின் குணப்பண்புகளின் மீது சூழற் காரணிகள் தாக்கம் ஏற்படுத்துகின்றன என்பதை நீங்கள் செய்த செயற்பாட்டின் மூலம் விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். பல்வேறு கல்வியியலாளர்கள் இதுபற்றிச் செய்தபரிசோதனைகளின் விளைவுகளைச் சுருக்கி, ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள ஒரு உருவப்படம் கீழே தரப் பட்டிருக்கிறது. பண்புகள் ஒருங்கிணைவதாலேயே ஆளுமை உருவாக்கம் பெறுகிறது. ஆகையால் குணப்பண்புகள் மீது தாக்கம் செலுத்தும் காரணிகள் ஆளுமையிலும் தாக்கம் செலுத்துகின்றன என்பதைப் புதிதாகக் கூறவேண்டியதில்லை. உங்களது பரிசோதனை மூலம் நீங்கள் கண்டறிந்த குணப்பண்புகளின் மீது தாக்கம் செலுத்தும் காரணிகள் ஏதாவது இவ்வுருவப்படத்தில் காணப்படுகின்றதா எனப் பாருங்கள்.




உருவப்படம் – 3 ஆளுமை மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

உருவப்படத்திற் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காரணிகளின் விளக்கம் கீழே தரப்படுகிறது.

1. வீடு

1) குழந்தைகளை வளர்த்துக்கொள்ளும் முறைகள்
2) பொருளாதார நிலை.
3) குடும்ப அங்கத்தவர்கள்
4) உளவியல் அளவீடுகளும், மனஎழுச்சிக்கான சூழலும்
5) நல்லொழுக்கக் கட்டுப்பாட்டு முறைகள்.

2. பாடசாலை

I ஆசிரியர்கள்
II மற்ற மாணவ மாணவிகள்
III பாடசாலையின் சமுதாய நிலைமைகள்
IV கற்பித்தல் முறைகள்

3. சம வயதினர் குழு.
   I ஏற்றுக் கொள்ளுதல்
   II புறக் கணித்தல்

4. சமய வழிபாட்டுத் தலங்கள்
   I பன்சல/பள்ளி/கோவில்
   II சமயப் பாடசாலைகள்
   III சமய நிகழ்ச்சிகள்

5. குடும்பத்துடன் உறவாடுபவர்கள்
   I உறவினர்கள்
   II அயல் வாசிகள்

6. வெகுசன தொடர்புச் சாதனங்கள்
   I புத்தகங்கள்
   II பத்திரிகை
   III வானொலி
   IV தொலைக்காட்சி
   V சினிமா

7. விழுமியங்கள்
   I கலாச்சாரம்
   II தேசிய விழாக்கள்
   III முன்மாதிரியான தனிப்பட்டவர்கள்
   IV தன்னைப்பற்றிய படம்
   V மனச்சாட்சி



படம்

### வீட்டின் செல்வாக்கு:

ஆளுமையின் மீது செல்வாக்குச் செலுத்தும் மிகப் பிரதானமான வெளிக்காரணி, வீடு என்பது இலக்கம் 3 உருவப்படத்தின் மூலம் உங்களால் விளங்கிக் கொள்ள முடியும். செயற்பாடு இல. 01 ல் நீங்கள் மேற்கொண்ட மதிப்பீட்டின் மூலமும் சில வேளைகளில் ஆளுமையின் மீது செல்வாக்கும் செலுத்தும் காரணிகளை நீங்கள் எதிர் கொண்டிருப்பீர்கள்.

### ஹெவீட், ஜென்கின்ஸ், ஆகியோரின் பரிசோதனைகள்:

ஹெவீட், ஜென்கின்ஸ் ஆகிய இரு மேல்நாட்டு உளவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கீழ்வரும் பரிசோதனைகளின் விளைவுகளினாலும் ஆளுமையின் மீது வீட்டின் செல்வாக்கு தெளிவாகக் காட்டப் பட்டுள்ளது. வயது 11-12க்கும் இடைப்பட்ட பிரச்சினைக்குரிய 500 பிள்ளைகள் இப்பரிசோதனைக்குட் படுத்தப்பட்டனர். கீழ்வரும் அட்டவணையில் பிரச்சினைக்குரிய பிள்ளைகளின் குணப்பண்புகளும் அல்லது நடத்தைப் பண்புகளும் அவர்கள் வாழ்ந்த வீட்டின் நிலைமைகளும் காட்டப்பட்டுள்ளன.

படம்





| குணப்பண்புகள்/ நடத்தைப்பண்புகள் | வீட்டு நிலைமைகள் |
|---|---|
| பிள்ளைகளின் முரண்பாடான நடத்தைகள்<br>1. தாக்கும் எண்ணம்<br>2. கொடுமை<br>3. கட்டளைக்குப் பணியாமை<br>4. துன்பம் விளைவிப்பவர்/. குழப்பம் விளைவிப்பவர். | பெற்றோர்களினால் புறக்கணிக்கப்படுதல்.<br>1. முறையற்ற விதத்தில் அல்லது அவசியமற்ற முறையில் கருத்தரித்தல்.<br>2. தாய் பிள்ளையின் மீது விரோதம் கொள்ளல்.<br>3. தாய் பாலியல் ரீதியான நடத்தையில் நன்னடத்தை இல்லாதிருத்தல்.<br>4. தாய்க்கும், தகப்பனுக்கும் இடையில் நல்ல தொடர்பு இல்லாதிருத்தல். |
| பிள்ளைகளின் நெறிபிறழ்ந்த நடத்தைகள்<br>1. கெட்டவர்களுடன் உறவாடல்<br>2. குழு ரீதியில் முரண்பாடான செயல்கள்<br>3. களவெடுத்தல்.<br>4. பாடசாலையைப் புறக்கணித்தல்<br>5. இரவாகும் வரை வீட்டிற்கு வராதிருத்தல் | பெற்றோர்களின் கவனிப்பின்மை<br>1. அசுத்தமான வீடு<br>2. கட்டுப்பாடு குறைதல்.<br>3. இலகுவான அல்லது எல்லை கடந்த ஒழுக்கக்கட்டுப்பாடு.<br>4. தாயின் (உளரீதியிலான) மடைமைத்தனம்.<br>5. முடுக்குப் பிரதேசத்தில் வீடு இருத்தல். |
| பிள்ளைகளினது விதி விலக்கான நடத்தைகள்<br>1. தனிமை நாட்டம்<br>2. அதிக வெட்கம்<br>3. உளச் சோர்வு<br>4. பற்றுணர்வு உள்ளமை எப்போதும் பணிவுள்ளமை | குடும்பம் பற்றிய விரக்தி அல்லது உளச்சோர்வு.<br>1. தந்தை அதிகம் விமர்சனத்திற்கு ஆளாதல்.<br>2. பெற்றோர்கள் சமுதாயப் பழக்கவழக்கமின்றியிருத்தல்<br>3. தாயின் எதிர்பார்ப்புக்கள் அதிகமாதல்.<br>4. பிள்ளைகளினிடையே விரோத மனப்பான்மையிருத்தல். |

பிள்ளைகளின் குணப்பண்புகளையும் நடத்தைப் பண்புகளையும் உருவாக்குவதில் வீட்டின் பல்வேறு நிலைமைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதுஹெவிட் , ஜென்கின்ஸ் ஆகிய இருவரினதும் தீர்மானமாகும்.

ஹெவிட் ஜென்கிஸ் ஆகிய இருவரினதும் பரிசோதனைகளின் பெறுபேறுகளை நன்றாக விளங்கிக் கொள்வதற்காக கீழ்வரும் செவ்வை பார்த்தல் பட்டியலைச் செய்யுங்கள்.

## செவ்வை பார்த்தல்-1

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் "√" என்னும், பிழையாயின் "×" என்னும் அடையாளமிடுங்கள்

1. ஹெவிட், ஜென்கின்ஸ் ஆகிய இருவரினதும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டோர் வயது 11-12க்கும் இடைப்பட்ட பிரச்சினைக்குரிய மாணவர்கள் 500 பேர் ஆவர். ☐

2. பிரதானமாக, முரண்பாடான நடத்தைகள், நெறிபிறழ்ந்த நடத்தைகள், விதிவிலக்கான நடத்தைகள் ஆகிய நடத்தைகளையுடைய மாணவர்கள் இவர்களிடையே இருந்தார்கள். ☐

3. இப்பரிசோதனைகளின் பெறுபேறுகளினூடாக பிள்ளைகளின் வீட்டுப் பொருளாதார நிலைமை ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தெளிவாகத் தெரிகிறது. ☐

4. பிள்ளைகளின் ஆளுமை நடத்தைகள் மீது பெற்றோர்களின் மனப்பாங்கு, மன எழுச்சியின் இயல்புகள், கட்டுப்பாட்டு முறைகள், குணப்பண்புகள் ஆதியன செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது இப்பரிசோதனைகள் மூலம் தெளிவாகிறது. ☐

5. பெற்றோர்களின் கட்டுப்பாடு குறைதல், இலகுவாகுதல், அளவுக்கதிகமாக இருத்தல் என்பன பிள்ளைகளின் நெறிபிறழ்ந்த நடத்தைகளுக்கும் காரணமாயமைந்துள்ளன என்பது இப்பரி சோதனைகளால் விளங்குகிறது. ☐

6. பிள்ளைகளின் சமூகமயமான நடத்தைகளுக்கு அல்லது நல்ல ஏற்றுக் கொள்ளப்பட்ட குணப்பண்புகட்கு காரணமாயமையும் வீட்டுச் சூழலின் இயல்பான நிலைமை இப்பரிசோதனை மூலம் வெளிப்படுத்தப்படாதிருப்பதற்குக் காரணம் இப்பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டவர்கள் பெரும்பாலும் பிரச்சினைக்குரிய மாணவர்களாக மாத்திரம் இருப்பதேயாகும். ☐

உங்களது விடைகளை மொடியூலின் இறுதியிலுள்ள விடைகளோடு ஒப்பிட்டு பாருங்கள்.

பிள்ளைகளின் நெறிபிறழ்ந்த நடத்தைகட்கு காரணமாவது வீட்டுச்செல்வாக்கு நிலைமைகளே என்பது ஹேவிட் ஜென்கின்ஸ் என்பவர்களின் பரிசோதனைகளால் நன்கு கண்டறியப்பட்டது. பெற்றோர்களின் அன்பு கிடைக்கப் பெறுமை, பெற்றோர்களின் பராமுகம், பெற்றோர்களின் ஆளுமைக் குறைபாடுகள் என்பன பிள்ளைகளின் முரண்பாடான நெறிபிறழ்ந்த தனித்தன்மை நடத்தைகட்குக் காரணமாகவுள்ளது என்பது தெளிவாகிறது.

உங்களது பரிசோதனைக்குட்பட்டவர்கள் ஒரு வகுப் பறையில் உள்ள சாதாரண மாணவர்களாதலால், அவர்களது நடத்தைகளிற் காணப்படும் விருப்பத்துக்குரிய குணப்பண்புகள், விருப்பத்துக்குரியதாயில்லாத குணப் பண்புகள் என்பவற்றுக்கு வீட்டுச் சூழலே காரணம் என்பதை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

விசேடமாக ஆரம்ப 5 வருடங்களிலும் குழந்தை வீட்டிலே பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள், அவர்களது பிற்கால வளர்ந்தநிலேயின் ஆளுமைக்கு அடிப்படை அமைக்கும் என்பதை பிராய்ட்டும் அவரைப் பின் பற்றியவர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள் என்பதை இங்கே ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்.



பெற்ருேருக்கும் ஆசிரியர்கட்கும் பயனளிக்கக் கூடிய வகையில் பிள்ளேகள் மீது செல்வாக்குச் செலுத்தும் வீட்டுச் செல்வாக்குகளே சுருக்கமாக பின்வருமாறு கூறலாம்.


- பிள்ளேக்கு அளவுகடந்த சுதந்திரத்தை வழங்காது அன்பையும், பாதுகாப்பையும் உச்ச அளவில் வழங்கவும்

- பிள்ளேயை தேவைக்கதிகமாக செல்லமாக வளர்த்தலோ அல்லது கவனிக்காதிருத்தலோ இன்றி குடும்பத்தில் அவனுக்குரிய இடத்தைக் கொடுங்கள்.

- விளக்கமான ஆனுல் சுதந்திரத்திற்குப் பாதகமாக இல்லாத ஒரு கட்டுப்பாட்டை வீட்டில் நடைமுறைப் படுத்துங்கள்.

- மிக இலகுவாக அதற்கடுத்த கட்டத்தை நெருங்குவதற்காக ஒரு பிள்ளேயின் வளர்ச்சியில் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் சுய ஆற்றல்களேப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள அவனுக்கு உதவியளியுங்கள்.

ஆளுமை மீது
செல்வாக்குச் செலுத்தும்
வேறு காரணிகள்.



படம்

பிள்ளையின் வீட்டுச் சூழலின் பல்வேறு அம்சங்கள் அவனின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை நீங்கள் இப்போது கற்றுக் கொண்டுள்ளீர்கள். வீட்டைத் தவிர்த்து ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் வேறு காரணிகளும் உண்டு என்பதை நீங்கள் உருவப்படம் 3 ன் மூலம் தெளிவாக அறிந்திருப்பீர்கள். அவைகளாவன: (உருவப்படத்தைப் பார்த்து நிரப்புங்கள்)

* பாடசாலை
* ..............................
* ..............................
* ..............................
* ..............................
* ..............................

மொடியூல் இல. 120105 இல் பிள்ளையின் சமுதாய வளர்ச்சி பற்றிய தலைப்பின் கீழ் நீங்கள் இக்காரணிகளைப் பற்றி கற்றுக் கொண்டுள்ளதால் திரும்பவும் அதைப்பற்றி வெவ்வேறாகக் கலந்துரையாட வேண்டிய அவசியமில்லை. பொதுவாக இவைகள் யாவும் தன்னைப்பற்றிய ஒரு விளக்கத்தை உருவாக்கிக் கொள்ள உதவியாக இருக்கும்.

தன்னைப் பற்றிய ஒருவிளக்கம் உருவாவதற்கு கீழ்வரும் விடயங்கள் காரணமாகின்றன.

பயிற்சி: வீட்டிலும், பாடசாலையிலும், பல்வேறு பட்ட கருமங்களை நிறைவேற்றும் பொழுது, பெற்றுக் கொள்ளும் பயிற்சி.

பின்பற்றுதல்: தான் பழகும் பல்வேறு தனிப்பட்டவர்கள், சம வயதுக் குழுவினர், ஆசிரியர்கள் ஆகியோர்களின் பல்வேறு பண்புகளையும் பின்பற்றுதல்.

மற்றவர்கள் வெளியிடும் கருத்துக்கள்: விசேடமாக மற்றவர்கள் தன்னைப்பற்றி வெளியிடும் கருத்துக்கள் தான் யார் என்பதை விளங்கிக் கொள்வதற்குக் குழந்தைக்கு உதவியாக இருக்கும், மற்றவர்கள் குழந்தையைப் பற்றி வெளியிடும் கருத்துக்களின் மீது உருவாகும் தன்னைப்பற்றிய படம் பலவீனமடைவதற்கோ அடக்கப்படுவதற்கோ இடமளிக்கும்.

சமுதாயத்தில் பெறும் அனுபவங்கள்: சமுதாயத்தில் பல்வேறுபட்ட தரங்களிலும் பங்களிப்புக் களிலும் தொழில்களிலும் இருந்து பெறும் அனுபவங்கள்:

தனது அனுபவங்களினால் ஏற்படுத்திக் கொள்ளும் அனுமானங்கள்: சொந்த அனுபவங்கள் மூலம் மேற்கொள்ளும் தீர்மானங்கள்.

பிள்ளை தன்னைப் பற்றி ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு விளக்கத்தின் உயர்ந்த, தாழ்ந்த தன்மைக்கேற்ப அவனது ஆளுமையும் உயர்ந்ததாகவோ, அல்லது தாழ்ந்ததாகவோ வளர்ச்சிபெறும் எனக் கூறப்படுகிறது.

பகுதி 11

## 2.0 ஆசிரியரும் ஆளுமை வளர்ச்சியும்

பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்குப் பெறும் காரணிகள் பற்றி நீங்கள் இம் மொடியூலின் இதற்கு முன்னுள்ள பகுதியில் கற்றுக் கொண்டீர்கள். உருவப்படம் 3ல் ஆளுமை வளர்ச்சியில் பாடசாலையின் செல்வாக்குத் தெளி வாக்கப்பட்டுள்ளது. பாடசாலைச் செல்வாக்கின் கீழ் ஒரு ஆசிரியர் என்ற முறையில் உங்களது மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு நீங்கள் ஏதாவது முறையில் வழிகாட்ட முடியுமாதலால், இந்த உபதலைப்புக்களைப் பற்றி நாங்கள் மேலும் விரிவாக ஆராய்வோம்.

ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஆளுமையை அளவிடுவதற்கு முயற்சி செய்வதுபோன்று பிள்ளைகளும் ஆசிரியர்களின் ஆளுமையை அளவிட முயலுவார்கள். ஆசிரியர்களைப் பற்றி மாணவர்களும், ஏனைய ஆசிரியர்களும் செய்துள்ள மதிப்பீடுகள் பற்றிய கூற்றுக்கள் ஆளுமை 1 - மொடியூலில் செயற்பாடு 2ன் கீழ் பல்வேறு பட்டவர்களின் கூற்றுக்களிடையே காணப்படுகின்றன. திரும்பவும் அப் பாடத்தைப் புரட்டி மேலே கூறப்பட்ட கூற்றுக்களைத் தெரிவு செய்து கீழே எழுதுங்கள். உங்களுக்கு இலகுவாயிருப்பதற்காக அக்கூற்றுக்களின் இலக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

7 12 14 16 17

இக் கூற்றுக்கள் சில ஆசிரியர்களின் சிறப்பான பண்புகளைப் பற்றியும், இன்னும் சில தீய பண்புகளைப் பற்றியும் கூறுகின்றன. ஆசிரியர் பற்றிப் பிள்ளைகள் நல்ல மனப்பாங்கு உள்ளவர்களாக இருந்தால் மட்டுமே ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவ முடியும்.

பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் ஆசிரியரின் ஆளுமை பல்வேறுவிதத்தில் செல்வாக்குப் பெறும். செல்வாக்குப் பெறும் பல வழிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.


**ஆசிரியர்களின் தன்னுதிக்க, ஒருமைப்பாட்டு நடத்தைகள்:**

ஒருவர் தனது தேவையை நிறைவேற்றிக் கொள்ள மற்றவர்களைப் பற்றிக் கவனியாது செயற்படுவது தன்னுதிக்க நடத்தையாகும். தனதும், மற்றவர்களினதும் மகிழ்ச்சிக்குரிய வகையில் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதே ஒருமைப்பாட்டு நடத்தையாகும். ஆசிரியரின் ஒருமைப் பாட்டு நடத்தையினுல் மாணவர்களிடையேயும் ஒருமைப்பாட்டு நடத்தைகள் ஏற்படுவதற்கு வழி வகுக்கலாம். ஆசிரியரின் தன்னுதிக்க நடத்தை மாணவர்களிடையே பிரதிபலிப்புக்களை ஏற்படுத்துவதிலும் பார்க்க, தீய நடத்தைகளை உருவாக்குவதற்குக் காரணமாக அமையும்.



**ஆசிரியரின் வகுப்பறை நிர்வாக முறை:**

ஆசிரியர் வகுப்பில் உபயோகித்துக் கொள்ளும் சமுதாயச் சூழ் நிலைக்கேற்ப பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மாற்றமடையும். இது சம்பந்தமாக லெவின், லிபிட், வைட், ஆகிய மூவரும் மேற்கொண்ட பரி சோதனைகளின் விளைவுகள் கீழே தரப்படுகின்றன.







| சமுதாயச்சூழ் நிலைகள் | அதன் பண்புகள் | விளைவுகள் |
|---|---|---|
| 1. சர்வாதிகாரச் சூழ்நிலை | 1.<br>கொள்கைகளையும் பிள்ளைகளின் செயற்பாடுகளையும் தலைவரே (ஆசிரியரே) தீர்மானிப்பர்.<br>2 பெரும்பாலும் தலைவர் குழுவிலிருந்து விலகி இருப்பர். | 1 மன எழுச்சியின் வேகம் அதிகரிக்கும்.<br>2<br>வெளிப்படையாக எதிர்ப்புக்களை தடை செய்யமுடியுமாஞலும் தனிப்பட்ட எதிர்ப்புககளைக் கட்டுப்படுத்த முடியாது. |
| 2. சனநாயகச் சூழ்நிலை | 1<br>கலந்துரையாடல் மூலம் கொள்கைகள் தீர்மானிககப்படுகின்றன.<br>2.<br>தலைவர் விருப்பத்திற்குரிய செயற்றிட்டங்களைச் சமர்ப்பிப்பார்.<br>3<br>தலைவரும் குழுவின் உறுப்பினராவர். | 1<br>தலைவர் விருப்பத்திற்குரியவராகிறுர்.<br>2<br>குழுக்களிடையே தன்னம்பிக்கையும், தைரியமும் உருவாகிறது.<br>3<br>பொது நோக்கத்திற்காகக் குழுவாகச் செயற்படுகிறது.<br>4 உறுப்பினர்களிடையே நட்பியல்பு உருவாகிறது. |
| 3 தலையிடாத சூழ்நிலை | 1<br>தலைவர் குழு அங்கத்தவாகள கேட்டால் மட்டுமே தகவல்களையும், உபகரணங்களையும் வழங்குவார்.<br>2<br>உறுப்பினர்கள் தாம்விரும்பியபடி தீர்மானங்களை மேற்கொள்வர்.<br>3<br>எதிலும் தலையிடாதிருத்தல். | 1<br>விரக்தியடைவர்<br>2. பேதங்கள் ஏற்படும்<br>3.<br>ஆக்கத்திற்குரிய வேலைகள் இல்லாதிருப்பர்.<br>4<br>சோம்பலடைவர்.<br>5<br>முரட்டுச் சுபாவம் உடையவராக மாறுவர். |

மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள லெவின், லிபிட் வ்யிட் என்பவர்களின் பரிசோதனை விளைவுகளைக் கவனமாக வாசியுங்கள். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பற்றிச் சிறந்ததொரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காகக் கீழ்வரும் செவ்வை பார்த்தலைச் செய்யுங்கள்

**செவவை பார்த்தல்-2**

பல்வேறு ஆசிரியர்கள் பல சந்தர்ப்பங்களில் தங்களது வகுப்பறையிற் கூறிய கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன. அத்துடன் மாணவர்களின் சில கூற்றுக்களும் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு கூற்றின் எதிரேயும் அக்கூற்றுக்கள் தொடர்பாக வகுப்பில் நிலவிய சூழ்நிலை (சர்வாதிகாரச் சூழ்நிலை, ஜனநாயகச் சூழ்நிலை, தலையிடாமைச் சூழ்நிலை) எது என்பதைக் குறியுங்கள்.

1. ''சட்டத்திட்டங்கள், கொள்கைகளை' வகுக்க இந்தப் பிள்ளைகளுக்கு உரிமையில்லை. அது எனக்குரியதாகும்''.

2. ''இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதனை நாம் எல்லோரும் சேர்ந்து தீர்மானிப்போம்''.

3. ''ஜயசேன, எனக்குசோம்பலாக இருக்கிறது நான் கூறியது சரியானது நான் எனக்கு விளங்கும் முறையில் இவ்வேலையைச் செய்வேன்''.

   ''உங்களுடைய கருத்துப் பிழையானது எனது கருத்தே சரியானது. நான் எனக்கு விளங்கும் முறையில் இவ்வேலையைச் செய்வேன்.''

   ''இப்போது ஆசிரியர் இல்லை. நாம் சும்மா இருப்போம்.''

   (மேலே கூறப்பட்டவை பிள்ளைகளின் கூற்றுக்களாகும்.)

4. ''பிள்ளைகளே நீங்கள் எல்லோரும் நான் கூறும் விதமாகவே வேலை செய்ய வேண்டும்.''

5. ''இப்பிள்ளைகளுக்கு ஏதாவது தேவையிருந்தால் என்னிடம் கூறுங்கள். இல்லையென்றால் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.''


6. ''நானும் இந்தப் பிள்ளைகளுடன் வேலை செய்ய வருவேன்.''

7. ''பிள்ளைகள் விரும்பியபடியே வேலைகளைச் செய்யுங்கள். நான் தலையிட வரமாட்டேன். வேலை முடிந்தவுடன் என்னிடம் கூறுங்கள்.''

8. "நானும் ஒரு ஆலோசனை வழங்குகிறேன். அது பொருத்தமானதா என எண்ணிப்பாருங்கள்."

உங்களது விடைகளை மொடியூலின் இறுதியிலுள்ள விடைகளோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

ஆளுமை வளர்ச்சிக்கு ஜனநாயகச் சூழ்நிலையே மிகப் பொருத்தமானது. ஆனால் தலையிடாமைச் சூழ்நிலை வெறுக்கப்படக் கூடியதொன்றாகும்.



ஒரு ஆசிரியரைப் பின்பற்றுவதற்கு அவர் பொருத்தமான முதிர்ச்சிபெற்ற ஆளுமையுடையவராக இருக்க வேண்டும். ஆனால் சாதாரண மனிதர்களிடையே காணப்படும் ஆளுமைக்குச் சமமான ஆளுமையே ஆசிரியர்களிடமும் காணப்படுகின்றது என்பது பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. பக்கச் சார்பின்றி நடு நிலையாகத் தொழிற்படும் திறமையும், மன எழுச்சி முதிர்ச்சி நிலையும், ஆசிரியர்களிடையே இருக்க வேண்டிய, மாணவர்கள் மதிக்கும் இரண்டு பண்புகளாகும். ஆசிரியரின் சமூகமயமற்ற பண்புகளில்லாத நிலை, பிள்ளைகளின் ஆளுமை மீது விரும்பத்தகாத செல்வாக்கினை ஏற்படுத்தும் என்பதனை நாம் கூற வேண்டியதில்லை. ஆசிரியர் நல்ல ஆளுமையை விருத்தி செய்து, பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவலாம் என்பதனையும் விசேடமாகக் கவனத்துக்கெடுத்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர்களிடம் இருக்க வேண்டிய பல நடத்தைப் பண்புகளை நீங்கள் மொடியூலில் கற்றுள்ளீர்கள். அவைகளைத் திரும்பவும் ஞாபகப்படுத்தி உங்களது ஆளுமையை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முயலுங்கள்.

## பொழிப்பு

இம் மொடியூலின் மூன்றாம் பகுதியில் நீங்கள் கற்றவைகளைச் சுருக்கமாகக் கூற முயலுவோம்.

**ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும்.**




வீடு. வாழ்வின் ஆரம்பகால ஐந்து வருடங்களே ஆளுமை உருவாக்கத்திற்கு அடிப்படையான காலமாகும். இதற்காக வீட்டுச் செல்வாக்கு முக்கியமாகும் என்பதனை நாம் புதிதாகக் கூறவேண்டிய அவசியமில்லை. குழந்தைகளைப் பராமரித்து வளர்க்கும் முறைகள், குழந்தைகளுக்கு வழங்கும் அன்பும், கனிப்பும், வீட்டில் பழகுவதற்குரிய சமூகம், தாய், தந்தை இருவரது தொடர்புகளின் மீது வீட்டில் உருவாகும் மன எழுச்சிச் சூழ்நிலைகள், வீட்டிலே காணப்படும் கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகிய இயல்புகளெல்லாம் ஆளுமை வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.


உறவினர்கள்: அயலில் வசிப்பவரும் சமவயது க்குழுவினரும்.

இவர்கள் பல்வேறு வழிகளில் பிள்ளையின் ஆளுமையின் மீது செல்வாக்குச் செலுத்துவார்கள். இதனுல் அவர்களினுல் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் பிள்ளையிடம் தன்னைப் பற்றிய சுயவிளக்கமும், பிரதிபலிப்பும் உருவாகின்றது.







பாடசாலை: பாடசாலையில் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் சர்வாதிகார நடத்தைகளும், ஒருமைப் பாட்டு நடத்தைகளும் பிள்ளையின் ஆளுமையின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன.



தொலைத்தொடர்புச் சாதனங்கள் பிள்ளை வாசிக்கும் நூல்கள், வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், சினிமாப் படங்கள் போன்றன ஆளுமையின் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதைக் கண்டறிய மேற்கு நாடுகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள் இவ்வாய்வுகளிலிருந்து இத் தொலைத் தொடர்பு சாதனங்களினால் நன்மைகளும் தீமைகளும் ஏற்படுகின்றன என்பது தெளிவாகிறது. ஆளுமை வளர்ச்சியில் நன்மைகள செல்வாக்குச் செலுத்துமளவிற்குத் தீமைகளும் செல்வாக்குச செலுத்துகின்றன.

வழிபாட்டுத் தலங்களும், நல்லொழுக்கமும்: சமயங்களும், நல்லொழுக்கக் கோட்பாடுகளும் வளர்ந்து வரும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பளிக்கின்றன. பிள்ளைகள் முதியவர்களாக வளரும் போது, தான் மதிக்கும் குணப்பண்புள்ள முன்மாதிரியானவர்களைத் தெரிவுசெய்து பின்பற்றத் தொடங்குவர்.





ஒரு ஆசிரியர் என்ற முறையில் உங்களது மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவி செய்வதற்கு முன், உங்களது ஆளுமையின் குறைபாடுகளை நீக்கிக் கொள்ளவேண்டும்.

மேலதிக வாசிப்பிற்கு இல. 7.0 இன் கீழ் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பாருங்கள்.

நீங்கள் இம் மொடியூலில் இது வரை கற்றவற்றை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கீழ்வரும் செவ்வை பார்த்தலில் ஈடுபடுங்கள்.

### செவ்வைபார்த்தல்-3

கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "√" என்னும் பிழையாயின் "×" என்னும் எதிரிலுள்ள கூட்டில் அடையாளமிடுங்கள்.

1. ஹெவிட் ஜென்கின்ஸ் என்பவர்களின் ஆய்வுகள் மாணவர்களின் நடத்தைகளுக்கும், அவர்களது வீட்டுச் சூழலுக்குமிடையே தொடர்புகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்கே நடத்தப்பட்டவை. ☐

2. ஹெவிட், ஜென்கின்ஸ் என்பவர்களின் ஆய்வு களின்படி பிள்ளைகளின் முரண்பாட்டு நடத்தைகள் பெற்றோர்களினால் புறக்கணிக்கப் படுவதன் விளைவேயாகும். ☐

3. தன்னுதிக்க நடத்தையின் போது பிள்ளைகள் மற்றவர்களினது மகிழ்ச்சிக்குரிய வகையில் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளச் செயற் படுவார்கள். ☐

4. ஆசிரியர்களின் தன்னுதிக்க நடத்தை பிள்ளைகளிடையே பிழையான நடத்தைகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம். ☐

5. வகுப்பறையில் சமுதாயச் சூழ்நிலைபற்றி லெவின், லிபிட், வயிட், என்பவர்களால் ஒரு ஆய்வு நடாத்தப்பட்டது. ☐

6. ஆளுமை வளர்ச்சிக்கு மிகவும் விருப்பமானதாக உள்ளது சனநாயக சமுதாயச் சூழ்நிலையாகும். ☐

7. தலையிடாமைச் சூழ்நிலையில், விரக்தி நிலைக்கு அதிக சந்தர்ப்பம் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.


8. நடுநிலைமை ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய மிக முக்கிய பண்பாக மாணவர்கள் கணிப்பார்கள். ☐

9. மற்றவர்கள் தன்னைப் பற்றி வெளியிடும் கருத்துக்கள் பிள்ளை தனது சுய பிரதிபிம்பத்தை உருவாக்கிக் கொள்ள உதவியாக அமையும். ☐

10. பிள்ளைகளின் ஆளுமைக் குறைபாடுகளைக் கவனிப்பதற்கு முன், ஆசிரியர்கள் தங்களது ஆளுமைக் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்தல் வேண்டும். ☐

உங்களது விடைகளை மொடியூலின் இறுதியிலுள்ள விடைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

# 3.0 ஆளுமையை அளவிடுதல்:



நீங்கள் இம் மொடியூலின் இதற்கு முன்னுள்ள பகுதிகளில் ஆளுமை என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்ததுடன் முதிர்ச்சி பெற்ற ஆளுமையின் பண்புகளையும் ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் கற்றுக் கொண்டுள்ளீர்கள். பிள்ளைகளின் ஆளுமையின் இயல்புகளை அறிந்து கொண்டால் மட்டுமே அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு உதவிசெய்ய முடியும். இதற்காக ஆசிரியர் ஆளுமையை அளவீடு செய்வது பற்றி ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்வது பயனுள்ளதாகும். இம்மொடியூலின் எஞ்சியுள்ள பகுதி ஆளுமையை அளவிடுதல் பற்றிய தகவல்களை ஆராய்கின்றது.

தனிப்பட்டவர்களின் ஆளுமை பல்வேறு நபர்களினால், பல்வேறு சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்படுகின்றதென்பதை இந்த ஆளுமை பற்றிய மொடியூலின் ஆரம்பத்தில் கற்றுக் கொண்டீர்கள்.

ஆளுமையை அளவிடுவதனால் பெறக்கூடிய சிலபயன்களை ஆராய்ந்து பார்ப்போம்.


- ஒவ்வொரு தொழிலுக்கும் பொருத்தமான விசேட ஆளுமைப் பண்புகள் இருக்கின்றன. அதனால் பல்வேறு தொழில்களுக்கான ஆட்களைத் தெரிவு செய்யும்போது ஆளுமையை அளவீடு செய்து பார்த்தல் பயனுள்ளதாகும்.

- பல்வேறு வழிகாட்டல்களுக்கும், ஒருவரின் ஆளுமைக் குறைபாடுகளை அல்லது விசேட பண்புகளை அறிந்து கொள்ளல் அவசியமாகும்.

- பல்வேறு பயிற்சி நெறிகளுக்குப் பொருத்தமான ஆட்களைத் தெரிவு செய்ய, ஆளுமைப் பண்புகளை அறிந்து கொள்வது பயனுள்ளதாகும்.

- மாணவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக ஆளுமையை அளவீடு செயதல் பற்றிய விளக்கம் ஆசிரியருக்கு மிக முக்கியமானது. கல்வியின் நோக்கங்களில் ஒன்று பூரண ஆளுமையை பிள்ளைகளிடையே உருவாக்குவதாகும்.

## ஆளுமையை மதிப்பீடு செய்வதற்கான நுட்பமுறைகள்:




தற்போது நாங்கள் ஆளுமையை மதிப்பீடு அல்லது அளவீடு செய்வதற்கான நுட்ப முறைகளை ஆராய்வோம். ஒருவரின் உயரம், நிறைபோன்ற பௌதீகப் பண்புகளை அளவிடுவதற்கு மிக இலகுவான உபகரணங்கள் இன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளன். ஆனால் ஆளுமை என்பது மிகச்சிக்கல் வாய்ந்த ஒரு எண்ணக்கரு. அதனை உயரம், நிறை போன்ற பௌதிகப்பண்புகளை அளவிடுவது போல இலகுவில் அளவிட முடியாது. அதே நேரம் அதனை அளவீடு செய்வதற்குப் பூரணத்துவம் வாய்ந்தும், சரியானதுமான அளவுகோல் ஒன்று இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆதலால் ஆளுமையை அளவிடுவது மிகக் கடினமான காரியம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். பல குணப்பண்புகள் ஒன்றிணைந்தே ஆளுமை உருவாக்கம் பெற்றுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆதலால் ஆளுமைபற்றி மதிப்பீடு அல்லது அளவீடு செய்வதானல் ஆளுமையின் ஒவ்வொரு குணப்பண்புகளையும், நடத்தைப் பண்புகளையும், நடத்தைப் பண்புகளையும்வெவ்வேறுகமதிப்பீடு அல்லது அளவீடு செய்ய வேண்டும். பொதுவாக ஆளுமைப்பண்பினை அளவீடு செய்யும் அளவீட்டு நியமங்களாக இருப்பது பரிசோதனைக்குட் படுபவரின் நடத்தைகளும், செயல்களுமாகும். தனிப்பட்டவர்களின் நடத்தை சம்பந்தமாகத் தகவல்களைப் பின்வரும் முறைகளிற் பெற்றுக் கொள்ள முடியும்.

- ஒருவர் செய்யும், சொல்லும், எண்ணும் விதத்தினை அவர்களிடமிருந்தே அறிந்து கொள்ளல்.
- தனிப்பட்டவர்களின் நடத்தைகளைப் பற்றி மற்றவர் களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.
- ஒருவர் நடந்து கொள்ளும் விதத்தினை அவதானித்தல்.

ஆளுமைப் பண்புகளை மதிப்பீடு செய்யும் நுட்ப முறைகட்கு மேற்கூறிய முறைகள் வெவ்வேறுகவோ அல்லது கூட்டாகவோ உதவக்கூடியன.

ஆளுமை விபரக்கொத்து



தனிப்பட்டவர்கள் செயயும், சொல்லும் எண்ணும் விதத்தினை அவர்களிடமிருந்தே அறிந்து கொள்ளுதல் புறத்தோற்ற முறை எனப்படும். ஆளுமை, விபரக்கொத்து, பிரச்சினை பரிசோதிக்கும் பட்டியல், சுயசரிதை போன்றவற்றை இம்முறைக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

தனிப்பட்ட ஒருவரின் உணர்வு, விருப்பு மனப்பாங்கு மன எழுச்சி, சமுதாயப் பழக்கவழக்கம் போன்றவைகளின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட ஒரு வினக்கொத்தினை வழங்கி, ஒரு பரீட்சார்த்தியின் துலங்கலைப் பெற்றுக் கொள்வதே இதிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. ஆளுமை - 1 மொடியூலின் முற்சோதனையில் உள்ளது இதற்கு உச் சமமான ஒரு சோதனையாகும். ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்ற விடையே இவ்வினக்களுக்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணம்

- நீங்கள் உங்கள் பிரச்சினைகளை மற்றவர்கட்கு எடுத்துக்கூற விரும்புவீர்களா? ஆம்/இல்லை
- மற்றவர்களின் இன்ப, துன்பங்களைச் செவிமடுக்க நீங்கள் விரும்புகிறீர்களா? ஆம்/இல்லை
- நண்பர்களுடன் பழகுவதற்கு நீங்கள் விரும்புவீர்களா? ஆம்/இல்லை

இவ்வாறான வினக்கள் மூலம் ஒரே நேரத்தில் குறிப்பிட்ட கால எல்லையுள் ஆளுமை பற்றி ஒரளவு மதிப்பீடு செய்ய முடியும் என்பது இதிலுள்ள ஒரு நம்பிக்கையாகும்.

ஆனல் இம்முறை வாசிக்கக் கூடியவர்களுக்கே பொருத்தமானது. மேலும் பரீட்சார்த்தி உண்மையான தகவல்களை அளிப்பதிலேயே பரீட்சையின் நம்பகம் பெரும்பாலும் தங்கியுள்ளது.

### பிரச்சினைகளைப் பரிசோதிக்கும் பட்டியல்

இம்முறை ஆளுமை விபரக்கொத்து முறையிலும் சற்று வித்தியாசமானது. உதாரணமாக இம்முறைப் பரீட்சைக்கு நீங்களே தோன்றி அதன் இயல்புகளை விளங்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.



### செயற்பாடு 2:

உங்களது வாழ்க்கையில் சிலவேளை தாக்கங்களை ஏற்படுத்தக்க கூடிய சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன். அவற்றை நன்கு வாசித்து அவை ஒவ்வொன்றும் (உங்களது உணர்வுகளுக்குப்) பொருந்தும் கூட்டினுள் ''√'' (சரி) என்று அடையாளம் இட்டுக்காட்டுங்கள்.

அட்டவணையிலுள்ள முதலாம் கூடு — ஆம், இது எனது வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தும் பிரதான பிரச்சினையாகும்.

இரண்டாம் கூடு — இது உணரும் விடயமாகும். எனினும் பிரச்சினையாக இல்லை.

மூன்றும் கூடு — இது எனக்கு எப்படியும் பிரச்சினையாக இல்லை.

1. பெற்றோர் என்னைப் பற்றி விமர்சிப்பவர்களாக இருத்தல்.

2. யாரும் என்னை விளங்கிக் கொள்ளவில்லையென எண்ணுதல்.

3. வீட்டிலுள்ளவர்கள் எனது விருப்பிற்குரிய நண்பர்களை வரவேற்காதிருத்தல்.

4. எனக்குத் தேவையானவைகளை உறுதியாக அறியாதிருத்தல்.

5. உயர்கல்வி பெற்றுக் கொள்வது பயனுள்ளதென உணர்தல்.

6. எனது தோற்றத்தை அழகுபடுத்திக் கொள்வதன் தேவை.

7. பெற்றோரின் கருத்துக்களும், எனது கருத்துக்களும் அடிக்கடி முரண்படுதல்

8. தற்போதையிலும் பார்க்க புகழ் பெறுவதற்கான விருப்பு.

9. பெற்றோரிடம் பழமைக் கருத்துக்கள் இருத்தல்.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**1ஆம் கூட்டில் "√" அடையாளங்கள் அதிக எண்ணிக்கையிருந்தால் உங்களுக்குப் போதிய பிரச்சினைகள் உண்டு என்று தெரிகிறது.**

3ஆம் கூட்டில் "V" அடையாளங்கள் அதிகமாக இருந்தால் குறிக்கப்பட்ட துறையில் உங்களுக்குப் பிரச்சினைகள் இல்லை என்று உணரக் கூடியதாக இருக்கிறது.


ஒருவரின் வாழ்வின் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய பெருந்தொகையான வினுக்களைக் கொண்ட தனிப்பட்ட பிரச்சினை வினுக்கொத்து ஒன்று தயாரிக்க வேண்டும். அவ்வாறில்லாமல், தான் விரும்பும் துறையை மட்டும் தெரிவு செய்து, அதனுடன் சம்பந்தமான பிரச்சினைகளைக் கொண்ட பெருந்தொகையான வினுக்களைத் தயாரிக்க வேண்டும். மேற்கூறிய பிரச்சினைகள் எத்துறையைப் பிரதானமாக உள்ளடக்குகிறது , என இனம் கண்டு, பொருத்தமான துறை தவிர்ந்த ஏனையவற்றை வெட்டி விடுங்கள்.

1. சுகாதாரவியல்
2. விளையாட்டு
3. சமுதாயமும் உளமும்
4. வீடும், குடும்பமும்
5. சமயம்.

(இலக்கம் 3ஐயும், 4ஐயும் நீங்கள் விடைகளாகத் தெரிந்திருப்பீர்:- என்பதில் சந்தேகமில்லை)

ஆளுமை விபரக்கொத்து நுட்பங்களைப் பற்றிய விமர்சனமே பிரச்சினைகளைப் பரிசோதிக்கும் பட்டியல் முறைக்குப் பொருத்தமாகும்.

## சுயசரிதைக்க கட்டுரைகள்



இத்தொழில்நுட்பத்தினூடாக ஒரு மனிதனின் உணர்ச்சிகள், அனுபவங்ச , எதிர்பார்ப்புகளைத் தானே அறிந்து கொள்ள முடியும். [illegible]துவாகத் தம்மைப் பரீட்சிப்பவர் தனது பழைய சம்பவங்களுக்கு அல்லது எதிர்கால எதிர்பார்ப்புக்களுக்கு முதலிடம் கொடுத்து கட்டுரை எழுதுமாறு கோரப்படுவர் சில கட்டுரைகளுக்கான உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

- நான் எவ்வாறு கற்றேன்?
- எனது எதிர்கால எதிர்பார்ப்புகள்.
- எனக்குப் பல்கலைக்கழகத்து அனுமதிக்குரியசந்தர்ப்பம் கிடைத்தால்.

சுயசரிதையை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். சுயமாகக் கட்டுரை எழுதுதல் - ஒழுங்கமைப்புகளுக்குட்பட கட்டுரை எழுதுதல். கட்டுரை எழுதுதல் மனவெழுச்சி நிலைகளைச் சுயமாக அறிந்து கொள்வதற்கு மிகவும் பொருத்தமானதாகும். ஒழுங்கமைப்புகளுக்குட்பட்ட கட்டுரைகளில் பரீட்சிப்பவர் உள்ளடக்கத்தை வரையறுத்துக் கட்டுப்படுத்துவர். சுயமாக மதிப்பீடு செய்வதின், பயன்பாடு கட்டுரையில் கொடுக்கப்பட்ட விடயங்களின் உண்மைத் தன்மையிலேயே தங்கியுள்ளது. சுயசரிதையினல் கிடைக்கும், உண்மைகளும், மதிப்பீடுகளும் , வேறு மதிப்பீடுகளாற் கிடைக்கும் முடிபுகளை ஒப்பீடு செய்வதற்குப் பயன்படுவதாகும்.

சுயசரிதையின் முழுப் பயன்பாட்டையும் பெறுவதற்கு, பரீட்சிப்பவர் சுயசரிதையின் முழு விடயங்களையும் ஆய்வு செய்வதில் திறமை படைத்தவராக இருக்க வேண்டும்.

சமவயதுக் குழுவினுல் மதிப்பீடு செய்தல்

சமவயதுக்குழுவில் உள்ளவர்களின், ஆளுமைப் பண்புகளை ஆசிரியரைவிட சமவயதுக்குழுவிலுள்ள ஏனையவர்கள் நன்கு தெரிந்திருப்பர். அதனுல், வகுப்பு மாணவர்களுடைய ஆளுமைப் பண்புகளைப்பற்றி சமவயதுக் குழுவினரால் வெளியிடப்படும் தகவல்கள் ஆசிரியருக்குப் பெரிதும் பயன்பாடு உடையதாகும்.



இதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தொழில் நுட்பமானது ''யரெனக் கூறுவது'' ஆகும். இத் தொழினுட்பத்தில் மாணவர் தனிப்பட்ட முறையில் பின்வரும் மாதிரி வினக்களுக்கு விடை எழுதுமாறு கேட்டகப்படுவர்.

உங்களுடைய வகுப்பில் உள்ள மாணவர்களில்/மாணவிகளில் மற்றவர்களுக்கு அதிக உதவி செய்ய விருப்பமுள்ளவர் யார்?

உங்களுடைய வகுப்பில் அதிகளவு நேர்மை உள்ள மாணவன்/மாணவி யார்?

உங்களுடைய வகுப்பில் அதிகளவு சுயநலமுடைய மாணவன்/மாணவி யார்?

ஒரு மாணவன்/மாணவியின் பெயரைப் பெறலாம் அல்லது சில மாணவர்கள்/மாணவிகளின் பெயர்களைப் பெறலாம். உதாரணமாக:

உங்களுடைய வகுப்பில் அதிகளவு உதவி செய்ய விரும்பும் மூன்று மாணவர்கள்/மாணவிகள் யாவர்? சமவயதுக்குழுவினுல் மேற்கொள்ளப்பட்ட முடிபுகளை ஆசிரியர்களின் முடிபுகளுடன் ஒப்பிட்டு பெருமளவுக்கு சரியான முடிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

சமூகமான முறை:

மேலே கூறிய தொழினுட்ப முறையை மேலும் விரிவடையச் செய்ததினுல் சமூகமான முறையின் மூலம் சமூகத்தொடர்புகள் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளன என அளவிடமுடியும். இதனைப்பற்றி மொடியூல் 12010 இல் கற்றுள்ளீர்கள். அதனுல் அதனைப்பற்றி இவ்வ...த்தில் விபரிக்கப்படவில்லை. சமூகமான முறைபற்றி மீண்டும் ஒரு முறை குழந்தைக் கல்வித் தொழில் நுட்பம் என்ற மொடியூலில் வாசியுங்கள்.

**அவதானிப்பு முறை:**



ஒருவரின் தினசரி வாழ்விற் பல்வேறு சந்தர்ப்பங்களை அவதானித்தல் ஆளுமை அளவீட்டில் பயனுள்ளதானாலும் ஒரு கடினமான முறையாகும். பல்வேறு சூழல் நிலைமைகளில் நீண்டகாலம் அவதானிக்க வேண்டியிருத்தல், இது கடினமான வேலையாக இருப்பதற்கு ஒரு காரணமாகும். அவதானிப்பு முறை உங்களுக்குப் புதியதொன்றல்ல. இம்மொடியூலில் பிள்ளைகளின் குணப்பண்புகளைக் கண்டறிவதற்காகப் பிள்ளையை அவதானிப்பவர்கள் ஈடுபட்டார்கள் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். ஒரு பாடசாலை மாணவனை உங்களால் அவதானிக்கக்கூடிய சில சந்தர்ப்பங்கள்:

- தினசரி நிகழும் வகுப்பறைக் கற்பித்தற் செயற்பாடுகளில்.
- சமூகம், சங்கங்கள் தொடர்பான செயற்பாடுகளில்.
- விளையாட்டுத் திடலில், விளையாட்டுப் போட்டிகளின்போது.
- கல்விச் சுற்றுலாக்களின் போது.
- சிரமதானச் செயற்பாடுகளின் போது.

வேறுபட்ட ஆளுமைப் பண்புகளான மாணவர்களின் மனப்பாங்குகள், விருப்பங்கள், மனவெழுச்சிகள், சமூகமயமாதல் பொறுப்புக்களை ஏற்கும் தன்மை, தொடங்கு மாற்றல், நம்பிக்கை ஆகியவற்றை அளவிட அச்சந்தர்ப்பங்கள் உகந்தனவாகும்.


பல சந்தர்ப்பங்களில் அவதானிப்பை மேற்கொண்ட பின்பு தான் நீங்கள் ஒருவரின் ஆளுமைப் பண்புகளைப் பற்றிய முடிவுகளை எடுக்க வேண்டுமெனக் கற்றுள்ளீர்கள் என்பது ஞாபகம் இருக்கும். அவதானிப்பு நடவடிக்கைகளிலிருந்து பலாபலன்களைப் பெற, அவதானிப்புக்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் அவதானிக்கப்பட்டவை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையிற் குறித்து வைக்கப்பட வேண்டும்.

**மதிப்பீட்டு நியமம்:**

அவதானிக்கப்பட்ட ஆளுமைப் பண்புகளை ஒழுங்காகப் பதிவு செய்து வைத்திருப்பது, அல்லது வேறு முறையினால் பெறப்பட்ட ஆளுமை மதிப்பீடுகள் ஆளுமை நியமம் எனப்படும். சில ஆளுமைப் பண்புகள் ஒருவரிடம் எந்த அளவுக்கு இருக்கின்றன என ஒரு முடிவுக்கு வருவதே இதனாற் கருதப்படுவதாகும். இவ்விடத்தில் அவதானிக்கப்பட்ட ஒருவர் பற்றிய தகவல் அளவுத்திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட (அவருக்குரிய) இடத்தில் குறிக்கப்படும். உதாரணமாக தொடங்குமாற்றல்' என்ற பண்பு ஒருவரிடம் அளவிடப்படுவதாக எடுத்துக் கொள்வோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள அளவுத்திட்டத்தில் X, Y ஆகிய இரண்டு கட்டங்கள் குறிக்கப்படுவதை விளங்கிக் கொண்டீர்களா?



| E | D | C | B | A |
| --- | --- | --- | --- | --- |
| மிகக் குறைந்தது | சாதாரண நிலையிலும் குறைந்தது | சாதாரணமானது | சாதாரண நிலையிலும் கூடியது | மிக உயர்ந்தது |
| எப்பொழுதும் புதிய விடயங்களை செய்வது கிடையாது. | மிக அருமை யாகச் சில புதிய விடயங்களைச் செய்ய முனைவது. | சில வேளைகளில் புதிய விடயங்களைச் செய்தல் | அடிக்கடி புதிய விடயங்களைச் செய்ய முற்படல் | எப்பொழுதும் சுதந்திரமாக புதிய விடயங்களைச் செய்ய முற்படல். |




5 முக்கிய அளவீடுகள் மேலே தரப்பட்டுள்ளன. இது "E" யில் ஆரம்பித்து "A" யில் முடிவடைகின்றது. ''தொடங்குமாற்றல்'' மிகக் குறைந்த கட்டத்திலிருந்து மிகக் கூடிய கட்டத்துக்கு செல்கின்றது. ஒவ்வொரு கட்டத்துக்குமுரிய நடத்தைகள் அவற்றின் கீழ் கூடுகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

அளவுத்திட்டத்தில் X புள்ளியானது சரணபாலன் என்ற மாணவனின் நிலையினை எடுத்துக் காட்டுவதாக நாம் கருதுவோம். அவன் தொடங்குமாற்றலில் குறை வுடையவனாகக் காணப்படுகின்றான். அவன் மிக அருமை யாகவே புதிய விடயங்களைச் சுதந்திரமாக மேற்கொள்ளச் சிந்திக்கின்றான். ஜெயபாலனின் நிலை Y புள்ளியினால் காட்டப்படுகிறது. அவன் அடிக்கடி புதிய விடயங்களைச் சுதந்திரமாக ஆரம்பிக்கின்றான்''.

இவ்வாறு அளவிடப்படும் முறைகளையுடைய மதிப்பீட்டு நியமங்களானவை, தனிப்பட்டவரின் ஆளுமைப் பண்பை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தப்படுகின்றன.

**செயற்பாடு 3**

இப்போது நீங்கள் இந்த அளவீட்டு முறையிற் பயிற்சி பெறுவதற்காக ஒரு செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

உங்களது வகுப்பில் நீங்கள் நன்றாக அறிந்த 10 மாணவர்களை தெரிவு செய்து, கீழ்வரும் அட்டவணைக்கு ஏற்ப அவர்களின் நல்லொழுக்க இயல்புகளை மதிப்பீடு செய்யுங்கள் ஒவ்வொரு மாணவனின் பெயரின் எதிரேயும் காணப்படும் கூட்டினுள் எதிர்பார்க்கப்படும் பண்புகள் அவனிடம் காணப்படும் அளவிற்கேற்ப "u" என்ற அடையாளத்தை அல்லது பொருத்தமான தரத்தினை (A B C D E) இடுங்கள்.


உதாரணமாக ஒரு பெயர் கீழ்வரும் அட்டவணையில் இடம் பெற்றுள்ளது.

| | ஆளுமைப் பண்பு. நல்லொழுக்கம் | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவனின் பெயர் | அப்பண்புகள் இடம்பெற்றுள்ள அளவுகள | | | | |
| | E மிகக் குறைந்தது | D சாதாரண நிலையிலும் குறைநதது | C சாதாரணமானது | B சாதாரண நிலையிலும் கூடியது | A மிக உயர்ந்தது |
| 1 ஜயசிங்கம் | | | | B | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| 6 | | | | | |
| 7 | | | | | |
| 8 | | | | | |
| 9 | | | | | |
| 10 | | | | | |

உங்களது இந்த அளவீட்டின் விளைவுகளை நீங்களே உடனுக்குடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

மேற்கூறிய மாணவர்களின் நல்லொழுக்க இயல்புகள் பற்றி மற்றவர்கள் செய்த மதிப்பீடுகளோடு இதனை ஒப்பிட்டுப் பாருங்கள்.

### நேர்முகப் பரீட்சை




இது பழமையானதும், தற்போது மிகவும் பரவலாகப் பாவிக்கப்படுவதுமான ஒரு ஆளுமை அளவீட்டு முறையாகும். ஆளுமை பற்றிய மொடியூலின் ஆரம்பத்திலேயே நேர்முகப் பரீட்சை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை உங்களுக்கு ஞாபகமாய் இருக்குமென நினைக்கின்றேன். ஆளுமையைப் பரீட்சிப்பவர் பரீட்சிக்கப்படுபவரை நேரடியாகச் சந்தித்து அவருடன் கலந்துரையாடி அவரின் உணர்வுகள், கொள்கைகள், மனப்பாங்குகள் ஆகியன பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள இதனால் முடியும் நேர்முகப்பரீட்சை பற்றிய பயிற்சியினைப் பெற்றுள்ளவர்கள் இம் முறையினால் மிக நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நேர்முகப் பரீட்சையை நடத்தும்போது கவனிக்க வேண்டிய பல அம்சங்களிற் சில கீழே தரப்படுகின்றன.

- நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கு பரீட்சிக்கப்படுபவருக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய பொருத்தமான சூழலைத் தெரிவு செய்தல்.
- பரீட்சிக்கப்படுபவரை விருப்புடனும், அன்புடனும் வரவேற்றல்.
- பரீட்சிக்கப்படுபவரோடு சுமுகமான ஒரு தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளல்.
- பரீட்சிக்கப்படுபவரின் பின்னணியைப் பற்றி நேரகாலத்தோடு ஏதாவது அறிந்திருத்தல்.
- அளவீடு செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் நடத்தைப் பண்புகளை அல்லது குணப்பண்புகளை நேர காலத்துடன் தீர்மானித்தல்.
- நேர்மையாக விடையளிப்பதற்குப் பரீட்சிக்கப் படுபவரை உற்சாகப்படுத்துதல்
- பரீட்சிக்கப்படுபவரின் குறைபாடுகளைக் கண்டறிய முயலாதிருத்தல்.
- சுதந்திரமாகத் தனது கருத்துக்களை வெளிப்படுத்த பரீட்சிக்கப்படுபவருக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.
- கேட்பதற்கான வினாக்களை நேர காலத்துடன் ஆயத்தப்படுத்தி வைத்திருத்தல்.
- நடுநிலைக் கொள்கை உள்ளவராக இருந்து விடைகளை ஏற்றுக் கொள்ளல்.


நேர்முகப் பரீட்சை முறை தனிப்பட்ட ஒரு பரீட்சை முறையாதலால் பலரை ஒரே நேரத்தில் பரீட்சிக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் அதற்காக நீண்ட காலத்தை ஒதுக்கி கொள்ள வேண்டியிருப்பது இதிலேயுள்ள ஒரு குறையாகும்.



புறத்தேற்று நுண்முறை

நீங்கள் தொகையான ஆளுமை அளவீட்டுச் சோதனைகளைக் கற்றுள்ளீர்கள். நாங்கள் இப்போது விசேடமான அதிக சிக்கலான சோதனை முறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. உளவியலிற் புறத்தேற்றம் என்பது அந்தரங்கமான தன்மைகளை பகிரங்கமாக அவதானிக்கக் கூடியவாறு ஏற்பாடு செய்வதேயாகும். அதற்காகச் சில தூண்டிகள் கொடுக்கப்படும். அவற்றுக்கு அவன் காட்டும் துலங்கல்களைக் கொண்டு ஆய்வாளர் அவன் ஆளுமை பண்புகளை உய்த்தறிவர். அவன் அமைப்பற்ற தூண்டிகளுக்கு ஓர் அமைப்பைக் கொடுக்கும்போது தன்னகத்தேயுள்ள பற்றுகள், ஆசைகள், மனப்பான்மைகள் கிலிகள் என்பவற்றை அவற்றின் மீது ஏற்றி பொருள் காண்பான். அதிலிருந்து ஆளுமைப் பண்புகளை அறிந்து கொள்ளலாம். இதுவே புறத்தேற்ற நுண் முறையாகும்.

இவ் வாய்வில் ஈடுபட்டுள்ளவர்கள் பின்வரும் தூண்டிகளைப் பயன்படுத்தி - கருத்துகளையும் எண்ணங்களையும் பெறுகின்றனர்.



1. ஒரு சொற்றெகுதியினைக் கொடுத்து அதற்கு ஒரு தொகுதிச் சொற்கள் துலங்கலாகப் பெறப்படும். கொடுக்கப்பட்ட சொற்றெகுதிக்குத் துலங்கலாக தமது மனத்தில் வரும் சொற்களை இடுவர்.

| உதாரணம்: | தூண்டி | துலங்கல் |
|---|---|---|
| | இருட்டு | ............................. |
| | கத்தி | ............................. |
| | முயல் | ............................. |
| | பயங்கரவாதம் | ............................. |
| | ரோசாப்பூ | ............................. |

2. பூரணமற்ற வசனங்களைப் பூரணப்படுத்துதல்: பரீட்சிக்கப்படுபவர் இவ்வசனங்களைப் பூரணப்படுத்துதல் வேண்டும்.

உதாரணம்:

1. சனக்கூட்டத்தின் மத்தியில் நான் செல்லும் போது செய்யவிரும்புவது ..........
2. ............. பார்க்கும்போது எனக்கு அதிக பயம் உண்டாகின்றது.
3. கதையைப் பூரணப்படுத்துதல்:

கதையின் ஆரம்பப் பகுதி பரீட்சிக்கப்படுபவருக்கு வழங்கப்படும். அவர் அதனைப் பூரணப்படுத்த வேண்டும.

ஒன்றிலிருந்து மூன்று வரையிலுமான பரீட்சையை மொழியாற்றலும் எழுத்தாற்றலுமுள்ளவர்களுக்கே வழங்க முடியும். துலங்கல்களாக முன் வைக்கப்பட்ட சொற்கள், வசனங்கள், கதைகள் என்பவற்றிலிருந்து, கீழ் வுணர்வுகளுக்குரிய (நனவுள்ளம்) மனவெழுச்சிகள், எண்ணங்கள் எதிர்பார்ப்புகள், மனவெழுச்சிகளின் தன்மைகள் என்பவற்றை இனங் காணலாம். இப்பரீட்சைகளின் துலங்கல்களை ஆய்வதற்கும் அவற்றின் கருத்துக்களை விளங்கிக் கொள்வதற்கும் நனவிலி நிலை நனவடியுள்ளம், ஆகியவற்றைப்பற்றி நல்ல விளக்கம் பெற்றிருக்க வேண்டும். கட்டுரைகள் கவிதைகள் சித்திரங்கள் ஆகிய கலைகளுடாக ஒருவர் தனது ஆளுமையின் தன்மைகளை வெளிப்படுத்துவார் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

**4. மைத்துடச் சோதனை:**

படங்களும், மைத்தடங்களும் தூண்டல்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. பரீட்சிக்கப்படும் தனிப் பட்டவர்கள் அவை பற்றிய எண்ணக்கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும். இவற்றின் மூலம் அவர்களுடைய நனவடியுள்ளத்து நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

**ஹேர்மன் ரேஷாக்மைத்தடச் சோதனை**

புறத்தோற்ற நுண் முறைச் சோதனைக்குச் சிறந்த உதாரணமாக ஹேர்மன் ரேஷாக்மைத்தடச் சோதனை காணப்படுகின்றது. இச்சோதனையில், வெள்ளை நிறப்பின்னணியில் கறுப்பு நிற அல்லது வேறு நிறத்தையுடைய பத்து மைத் தடங்கள் உள்ளடக்கப்படும் அத்தகைய மைத்தடங்களில் ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது.



இச்சோதனையில், இப்படங்கள் அல்லது மைத்தடங்கல் ஒவ்வொன்றும் எதனைக் காட்டுகின்றது என பரீட்சிக்கப்படுபவர் விமர்சனம் செய்ய வேண்டும். உள மருத்துவர்கள், அவர்களின் துலங்கல்களை ஆராயும்போது, தாழ்வு மனப்பான்மை அல்லது வேறு உள நிலைகள் வெளிப்படுத்தப்படும். சாதாரண ஆசிரியர் இங்கு குறிப்பிடப்படும் புறத்தேற்ற நுண்முறைச்சோதனையை விசேட பயிற்சியின்றி பயன்படுத்த முடியாது. இதுவரை நீங்கள் ஆளுமையை அளவிடும் மதிப்பீடு செய்யும் பல தொழில் நுட்பங்களைக் கற்றுள்ளீர்கள். ஆனால் இத்தொழில் நுட்பங்களிற், பூரண நம்பிக்கை வைக்க முடியாது. பல தொழில்நுட்பங்களின் அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் ஒன்றிணைத்து முடிவுகளைக் காணும்போது, அதிக நம்பிக்கையுள்ள முடிவுகளைப் பெறலாம். இந்த மொடியூலின் பகுதி 3 இல் ஆளுமையை அளவிடுதல் என்ற பகுதியில் கற்றவற்றை நாம் சுருக்கமாகக் கூறுவதால் அவற்றை மீள வலியுறுத்த உதவுகின்றன.

**பொழிப்பு**

ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி முயற்சி, தொழில் தெரிவு, முதலியவற்றில் வழிகாட்டுவதற்கு உதவுமுகமாக ஆளுமையைக் அளவிடுதல் பற்றிய அறிவு விளக்கம் பெற்றிருக்க வேண்டும.

ஆளுமையானது சிக்கல் நிறைந்ததாக இருப்பதனால், ஆளுமையைச் சரியாக அளவிடுவது கடினமானதாகும். அதே போல் ஒருவரின் முழு ஆளுமையையும், ஒரே முறையில் அளவிட முடியாது. ஒரு முறையில் ஒரு ஆளுமைப் பண்பினை மட்டும் அளவிடமுடியும்.

ஆளுமைச் பரிசோதனை ஒன்றில் ஒருவர் எவ்வாறு செயற்படுகின்றார் பேசுகின்றார், சிந்திக்கின்றார் என்பது அல்லது ஒருவரின் நடத்தை அளவீடு செய்யப்படுவது மதிப்பீடு செய்யப்படுவது என்பன உள்ளடக்கப்படுகின்றன.

ஆளுமை விபரக் கொத்து, பிரச்சினை விடுவிக்கும் பட்டியல் சுயசரிதைக் கட்டுரைகள், ஆகிய ஆளுமையை அளவிடும் தொழில் நுட்பங்களினூடாக பரிசோதிக்கப் படுபவர் தானே தனது ஆளுமைப் பண்புகளை வெளியிடுவர்.

சமய வயதுக்குழுவினரின் மதிப்பீடு, அவதானிப்புகள் அளவுத்திட்டமுறை நேர்முகப் பரீட்சை, ஆகிய ஆளுமையை அளவிடும் தொழில் நுட்பங்கள், மற்றவர்களால் ஒருவரின் ஆளுமை அளவிடப்படும் முறைகளாகும்.

புறத்தேற்ற நுண்முறைத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதால், உளமருத்துவர், ஒருவரின் அந்தரங்கமான உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும், உளப் பிரச்சினைகளையும், வெளிக் கொணர முடியும்.

எந்தவொரு தொழில் நுட்பமுறையினாலும் பிழையற்ற பூரணமான முடிவினை அடைய முடியாது. மிகப் பொருத்தமானது என்னவென்றால், பல்வேறு தொழில், நுட்பங்களைப் பயன்படுத்திக் கிடைக்கும் முடிவுகளை ஒன்றிணைத்து ஒரு பொதுவான முடிவினைப் பெறுவதாகும்

## செவ்வை பார்த்தல் 4

ஆளுமையை அளவிடுதல் என்பதன் கீழ் நீங்கள் கற்றுள்ளவைகளை எவ்வளவு தூரம் விளங்கிக் கொண்டுள்ளீர்கள் என்பதைப் பார்ப்பதற்குப் பின்வரும் செவ்வைபார்த்தலை செய்வதில் ஈடுபடுங்கள்.

பின்வரும் வசனங்களை வாசித்து அவற்றின் கருத்துக்கள் சரியானால் "√" என்றும், பிழையானால் "×" என்றும் எதிரேயுள்ள கூட்டினுள் அடையாளமிடுங்கள்.

1. நவீனமுறை பரீட்சைகள் மூலம் ஒருவரின் ஆளுமையை அளவிடமுடியும். ☐

2. சாதாரண வாழ்க்கையில் எல்லோரும் ஏதோ ஒரு முறையில் மற்றவர்களின் ஆளுமையை மதிப்பீடு செய்யமுயல்வர். ☐

3. ஆளுமை விபரக் கொத்து நுட்பமுறை ஆளுமையை மதிப்பீடு செய்யும் ஒரு புறத்தேற்று முறையாகும். ☐

4. ஒரு ஆளுமைப் பரீட்சையில் சாதாரணமாக ஒரே நேரத்தில் ஒரு ஆளுமை அம்சத்தையோ அல்லது குணப்பண்பினையோ மதிப்பிட முடியும். ☐

5. அதிக எண்ணிக்கையானோர் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பங்களில் நேர்முகப் பரீட்சை மூலம் ஆளுமையை அளவீடு செய்தல் பொருத்தமானதாகும். ☐

6. மதிப்பீட்டு நியம நுட்ப முறையினால் ஒருவரின் குணப்பண்பு அல்லது ஒழுக்கப்பண்பு ஏதோ ஒரு தரத்துக்கு அளவிடப்படுகின்றது. ☐

7. சமவயதினர்களின் மதிப்பீட்டின் மூலம் மாணவனின் சமுதாய மயமாக்கலின் இயல்பினை அளவீடு செய்வதற்கு இருக்கும் ஒரு சிறந்த முறை சமூகமான முறையாகும். ☐

8. ஒருவரின் மன எழுச்சிப் பிரச்சினைகள், விரக்திகள், நிறைவேறாக எண்ணங்கள் போன்றவைகளை வெளிப்படுத்த புறத்தேற்ற நுண்முறைகள் மூலமே முடியும். ☐

9. கதையொன்றின் ஆரம்பத்தைக் கொடுத்து மிகுதியைப் பரீட்சிக்கப்படுவரைக் கொண்டு முடிப்பதற்கு ஒழுங்கு செய்தல் சுயசரிதைக் கட்டுரைக்கு உதாரணமாகும். ☐

10. பெறுபேறுகளின் நம்பகத்தன்மையை, ஒரு நுட்ப முறையினால் ஆளுமைப் பண்புகளை அளவீடு செய்து பெற்ற பெறுபேறுகளை, வேறு நுட்பமுறையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ☐

மொடியூலின் இறுதியிலுள்ள சரியான விடைகளுடன் உங்களது விடைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.

நீங்கள் இம்மொடியூலில் கற்றுள்ள விடயங்களை எவ்வளவு தூரம் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளீர்கள் என்பதை அவதானிப்பதற்கும், அவ்விடயங்களை நன்றாக மனதிலிருத்திக் கொள்ளவும் இப்பிற் சோதனையைச் செய்யுங்கள்.

## 4.0 பிற்சோதனை

அடைப்புக்குள்ளிருக்கும் பொருத்தமற்ற பகுதியை வெட்டி விடுங்கள்.

1. முரட்டுச் சுபாவம் (ஒரு குணப்பண்பாகும், ஒரு ஆளுமை வகையாகும்.)

2. அதிகம் பேசாதிருத்தல்
(அகமுகவிருப்பின், புறமுகவிருப்பின்)
ஒரு பண்பாகும்

3. ஆளுமை பற்றிய அடுக்கமைப்புத் தத்துவத்தை எடுத்துக் கூறியவர் (செல்டன், ஐய்செங்க்) என்பவராவர்.

4. அகமுக விருப்பு, புறமுக விருப்பு அளவீட்டினால் அளவிடப்படுவது தனிப்பட்டவர்களின் (சமுதாய விருப்பின், மனஎழுச்சி நிலைப் பாட்டின்) இயல்பேயாகும்.

5. ஆளுமையின் மிக முக்கிய பண்பாவது அதன் (அபூர்வத் தன்மையாகும், நிலையான இயல்பாகும்).

2. கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் "√" என்னும் பிழையாயின் "×" என்னும் எதிரிலுள்ள கூட்டில் அடையாளமிடுங்கள்.

1. தனிப்பட்ட ஒருவரின் பூரண ஆளுமையை அளவிடுவது கடினமான செயலாகும்.

2. ஒருவரின் நடத்தையின் பெரும்பகுதி அவரின் நனவிலி நிலையினால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பது பிராயிட்டின் கருத்தாகும்.

3. ஆளுமை வளர்ச்சி சிறப்புற்று விளங்கவேண்டுமாஞல் பிள்ளை எதிர் கொள்ளும் உள, பாலியல் பருவங்களின் நடத்தைகள் பூரணமான கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும்.

4. ஒருவரின் ஆளுமையில் அவருக்கு மட்டும் உரித்தான விசேட பண்புகள் இருப்பது அபூர்வமானதாகும்.

5. தலையிடாமைச் சமூகச் சூழ்நிலையில் செயலாற்றும் குழு உறுப்பினர் ஒருவருக்குப் பூரண சுதந்திரம் உண்டு.

3. கீழ்வரும் பட்டியலில் சில விடயங்கள் பிள்ளையின் (1) சுயவிளக்கத்தை உருவாக்கிக் கொள்ள உதவும் காரணிகளாகும். சில விடயங்கள் (2) ஆளுமையை உருவாக்கிக் கொள்ள உதவும் காரணிகளாகும். வேறும் சில விடயங்கள் பண்பாகும். சுய விளக்கத்தை உருவாக்கிக் கொள்ள உதவும் காரணிகள. எதிரே இலக்கம் (1) ஐயும், ஆளுமையை உருவாக்கிக் கொள்ள உதவும் காரணிகளின் எதிரே இலக்கம் (2) ஐயும், முதிர்ச்சியடைந்த ஆளுமைக் குணப்பண்புகளின் எதிரே இலக்கம் (3) ஐயும் இடுங்கள்.

| | |
|---|---|
| * தொழிலில் சுயவிரிபு | ☐ |
| * ஒத்த வயதுக்குழு பின்பற்றுதல் | ☐ |
| * சுயமாக விடயங்களின் தொடர்புகளை அறிந்துகொள்ளல். | ☐ |
| * தொலைத் தொடர்புச் சாதனங்கள் | ☐ |
| * சுயநம்பிக்கை | ☐ |
| * தன்னைப்பற்றி மற்றவர்களால் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுதல். | ☐ |
| * நல்லொழுக்கம் | ☐ |
| * சமுதாயத்தில் பெறும் அனுபவங்கள் | ☐ |
| * சுய இசைபு | ☐ |

4. ஆளுமைப் பரீட்சை வகைகளுக்கு உபயோகப்படுத்தக் கூடிய முன்மாதிரியான விஞக்கள் (அ) பகுதியின் இடது பக்கத்தில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு விஞவும் உள்ளடக்கக்கூடிய சோதனைத் துறைகளை (ஆ) பகுதிப் பட்டியலிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை (அ) பகுதியின் வலப் பக்கக் கூட்டில் எழுதுங்கள்.

அ) இடைவெளிகளை நிரப்பி வசனங்களை பூர்த்திசெய்க

1. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நான் ☐

2. உமதுவகுப்பில் வேலைகளைப் புறக்கணிப்பதற்கு அதிகமாக முயற்சி செய்யும் மாணவன் யார்? ☐

3. தொடங்கும் ஆற்றல் எனும் குணப் பண்பிற்காக சிறிபாலனுக்கு .......... B ............ தரம் கிடைத்தது ☐

4. என்னால் ஏதும் தவறுகள் ஏற்பட்டால் ஒரு பிள்ளையிடமாக இருந்தாலும் சரி, மன்னிப்பு கேட்பேன். ஆம்/இல்லை. ☐

5. நான் இம்முறை க. பொ. த. பரீட்சையில் சித்தியடைந்தால் ........... என்னும் அமைப்பில் உங்கள் நேர்மையான கருத்துக்களை உள்ளடக்கி ஒரு கட்டுரை வரைக. ☐

(ஆ) 1. மதிப்பீட்டுப் பிரமாணங்கள்

2. ஆளுமை விபரக் கொத்

3. சமூகமான சோதனைகள்

4. புறத்தேற்றுச் சோதனைகள்

5. யாரென ஊகிக்கும் சம வயதினரின் மதிப்பீடு.

6. சுய சரிதைக் கட்டுரைகள்.

உங்களது விடைகளை மொடியூலின் இறுதியில் தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப்பாருங்கள்.

இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றிகரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.

## 5.0. ஒப்படை



1. "பிள்ளையின் ஆளுமை விருத்தியில் ஆசிரியரின் ஆளுமை பல விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்". இக் கூற்றினை கீழே தரப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி விளக்குக.

i. * ஆசிரியரின் வகுப்பறை நிருவாகமுறை.
   * தனிப்பட்ட நடத்தைக் கோலங்கள்.
   * சக ஆசிரியர்களுடன் சம்பாஷனை நடத்தும் முறை.

# 6.0. விடைகள்

**செவ்வை பார்த்தல்-1**

1. √ 2. √ 3. × 4. √ 5. √ 6. √

**செவ்வை பார்த்தல்-2**

| | | | |
|---|---|---|---|
| 1. | சர்வாதிகாம் | 5. | தலையிடாமை |
| 2. | ஜனநாயகம் | 6. | ஜனநாயகம் |
| 3. | தலையிடாமை | 7. | தலையிடாமை |
| 4. | சர்வாதிகாரம் | 8. | ஜனநாயகம். |

**செவ்வை பார்த்தல்-3**

1. √ 2. √ 3. × 4. √ 5. √ 6. √ 7. √
8. √ 9. √ 10. √

**செவ்வை பார்த்தல்-4**

1. × 3. √ 5. × 7. √ 9. ×
2. √ 4. √ 6. √ 8. √ 10. √

**பிற்சோதனை 1**

1
1. ஒரு குணப்பண்பாகும்.
2. அகமுகவிருப்பின்.
3. ஐசென்க்
4. சமுதாய விருப்பின்
5. அபூர்வத்தன்மையாகும்.

2
1. √ 2. √ 3. ×
4. √ 5. √

3

| | |
|---|---|
| சுய விரிபு | 3 |
| ஒத்த வயதினர் | 2 |
| பின்பற்றுதல் | 1 |
| சுயமாக விடயங்களின் தொடர்புகளை அறிந்துகொள்ளல் | |
| தொலைத்தொடர்புச் சாதனங்கள் | 2 |
| சுயநம்பிக்கை | 3 |
| என்னைப்பற்றி மற்றவர்களால் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுதல் | 1 |
| நல்லொழுக்கம் | 2 |
| சமுதாயத்தில் பெறும் அனுபவங்கள் | 1 |
| சுய இசைபு | 3 |

4(அ)
1 — 4
2 — 5
3 — 1
4 — 2
5 — 6

# 7.0 உசாத் துணை நூல்கள்


1. கே. லோவெல்
கல்வி உளவியலும் குழந்தையும் 4 ஆம் அத்தியாயம், பக் 71-76 14 ஆம் அத்தியாயம் முழுவதும்.

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.